மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை

அசல் வழக்கு எண். 236 /2019

**2025–ம் ஆண்டு மார்ச் மாதம் 26–ம் நாள் புதன் கிழமை** /பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) **செல்வி. S.இவாஞ்சலின், இளநிலை உதவியாளர் திருமதி. P.தேன்மொழி, உதவியாளர்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சாமிராஜ் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | :மாரிமுத்து | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | :வி.களத்தூர் | வயது | : 70/2025 |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

(i) வாதி கோரியுள்ள பரிகாரம் என்ன என்று தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். என்னுடன் பிறந்த அண்ணனின் பெயர் பெயரிசாமி ஆகும். எதிர்வழக்குரையில் கண்டுள்ள சங்கதிகளை நான் தான் எனது வழக்கறிஞரிடம் சொன்னேன். 2ம் வாதி முத்தம்மாளின் கணவர் பெயர் நடேச படையசாச்சி என்றால் சரிதான். அவர்களது பிள்ளைகளின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. கிருஷ்ணமூர்த்தி என்பவரை மட்டும் தெரியும். தாவா சொத்தின் ச.எண் தெரியுமா என்றால் 89/1A ஆகும். விஸ்தீரணம் தெரியுமா என்றால் 2 ஏக்கர் 26 செண்ட் ஆகும். வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா அளித்து ஒத்திவைக்கப்படுகிறது.